# நெல்லையில் பா.ஜ.க. – அ.தி.மு.க.வைச் சேர்ந்த

# 1000க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்









நெல்லை, பிப்.8–

**‘திருநெல்வேலி மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு’ நிகழ்ச்சியில் கலந்துகொள்ள நெல்லை சென்றுள்ள முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திருநெல்வேலி மாவட்ட பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டடோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

‘திருநெல்வேலி மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு’ நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நெல்லை சென்றுள்ள தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், திருநெல்வேலியில் நேற்று முன்தினம் (06.02.2025) மாலை, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பா.ஜ.க.வைச் சேர்ந்த மாவட்ட தலைவர் ஏ.தயாசங்கர், மாவட்ட பொதுச்செயலாளர் வேல் ஆறுமுகம், மாநில பொதுக்குழு உறுப்பினர் வி.மீனாட்சிசுந்தர், மாவட்ட விவசாய அணி தலைவர் சி.முருகன், மாவட்ட சிறுபான்மை தலைவர் என். இசக்கார் ராஜ்பால், மாவட்ட பொருளாதார பிரிவு தலைவர் எஸ்.சபரிமலை வாசன், மாவட்ட ஊடக பிரிவு தலைவர் எஸ்.மாரியப்பன், திருநெல்வேலி நகர் கிழக்கு மண்டல தலைவர் இ.இசக்கி அய்யப்பன், தச்சநல்லூர் வடக்கு மண்டல தலைவர் எம். பிரேம்குமார், மானூர் மத்திய ஒன்றிய தலைவர் கே.ரவி, நெல்லை நகர் மண்டல முன்னாள் தலைவர் டாக்டர் சி.பொன்னம்பலவாணன், மாவட்ட விவசாய அணி ஐடி பிரிவு எம்.லெட்சுமணன், மாவட்ட ஓபிசி அணி செயலாளர்கள் ஏஆர்சுந்தராஜ், ஏ.அருண்செல்வம், மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் பி.பாலன், மாவட்ட விவசாய அணி செயலாளர்கள் என்.ரூபன், எஸ்.நடராஜன், மாவட்ட தமிழ் வளர்ச்சி பிரிவு துணைத் தலைவர் ஆர்.கார்த்திக், மாவட்ட பொருளாதார பிரிவு துணைத் தலைவர் எம்.வெங்கடேஷ், மாவட்ட பொருளாதார பிரிவு செயலாளர்கள் எஸ்.ஆறுமுகம், ஏ.ஆர்.சேதுராமன், எஸ்.துரை சண்முகவேல், சி.செல்வராஜ், பி.லட்சுமணன் மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளரும் – திருக்குறுங்குடி பேரூராட்சி மன்ற தலைவரும் – கூட்டுறவு சங்க தலைவருமான இ.இலங்காமணி மற்றும் ச.மாணிக்கராஜா, எஸ்மணிகண்டன், எஸ்.இசக்கிதுரை, சு.வெள்ளைபாண்டி, எம்.மாரியப்பன், எம்.ஐகோர்ட் மகாராஜா, எஸ்.உதயகுமார், ஆர்.முத்துப்பாண்டி, வி.இசக்கிராஜ், வி.உதேஷ் உள்ளிட்ட 1000–க்கும் மேற்பட்ட பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, திருநெல்வேலி கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், திருநெல்வேலி மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### சென்னை – பெங்களூரு மற்றும் சென்னை – கன்னியாகுமரி

## தேசிய நெடுஞ்சாலை வழித்தடங்களை மேம்படுத்தப் போவது எப்போது?

### மக்களவையில் – கழகக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

*புதுடெல்லி, பிப். 8-*

தமிழ்நாட்டின் பொருளாதாரம் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்த ஒன்றிய பட்ஜெட்டில் இருந்து எந்தவொரு நிதியும் தராமல் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசு, வருகின்ற நிதியாண்டில் தமிழ்நாட்டில் புதிய தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளதா எனவும் தற்போதுள்ள நெடுஞ்சாலைகளில் ஏதேனும் விரிவாக்கங்கள் அல்லது மேம்படுத்தல்கள் தொடர்பாக திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :

வரும் நிதியாண்டில் தமிழ்நாட்டில் புதிய தேசிய நெடுஞ்சாலைகளை அமைக்க திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதா? அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை எனக் கேள்வி எழுப்பினார். ஏதேனும் தெரியப்படுத்தவும்

மாநிலத்திற்குள் இணைப்பை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள நெடுஞ் சாலைகளில் ஏதேனும் விரிவாக்கங்கள் அல்லது மேம்படுத்தல்கள் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அவ்வாறு திட்டமிடப்பட்டிருந்தால், அதன் விவரங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக, தொழில்துறை வழித்தடங்களான சென்னை பெங்களூரு மற்றும் சென்னை - கன்னியாகுமரி வழித்தடங்களை மேம்படுத்த அல்லது விரிவுபடுத்துவதற்கான திட்டங்கள் ஏதேனும் உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலங்கள் (SEZ) மற்றும் தொழில் மையங்களில் சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் வரவிருக்கும் திட்டங்களில் சூரிய சக்தியில் இயங்கும் நெடுஞ்சாலைகள் அல்லது மரங்களால் சூழப்பட்ட சாலைகள் போன்ற பசுமை முயற்சிகளை இணைக்க திட்டங்கள் உள்ளதா, அவ்வாறு இருந்தால், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டில் சாலை கட்டுமானத் திட்டங்களில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்ய ஒன்றிய அரசு எவ்வாறு திட்டமிட்டுள்ளது எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டின் ஆற்றுப்பாதைகள், மலைப்பாங்கான அல்லது மலைப்பகுதிகள் அல்லது நெரிசல் மிகுந்த பகுதிகள் போன்ற முக்கியமான பகுதிகளில் பாலங்கள் அல்லது சுரங்கப்பாதைகள் அமைப்பதற்கான புதிய முன்மொழிவுகள் உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

---

### தமிழ்நாட்டில் ஆன்மிக சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த

## ஒன்றிய அரசு போதுமான நிதி ஒதுக்கியிருக்கிறதா?

### மக்களவையில் – திருவண்ணாமலை – சி.என். அண்ணாதுரை கேள்வி!

*திருவண்ணாமலை, பிப். 8-*

ஆன்மிக சுற்றுலா தலங்களின் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பிரசாத் திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்துகிறது. ஆனாலும், இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள ஆன்மிக சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த நிதி ஒதுக்காமல் பாரபட்சம் காட்டுவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில், மக்களவையில் சுற்றுலாத் துறை தொடர்பான விவாதத்தின்போது, திருவண்ணாமலை தொகுதி தி.மு.க. சி.என்.அண்ணாதுரை எம்.பி. தெரிவித்திருப்பதாவது:



புனித யாத்திரை, புத்துயிர் மற்றும் ஆன்மீக பாரம்பரியத்தை மேம்படுத்தும் இயக்கமான பிரசாத் திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்துகிறது. எனவே, இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்கு, ஆன்மிக சுற்றுலா தலங்களை தேர்ந்தெடுப்பதற்கான நடைமுறைகள் குறித்து அரசு விளக்க வேண்டும். ஆன்மிக சுற்றுலாத் தலங்களை நிலையாக மேம்படுத்தவும், உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கவும் பிரசாத் திட்டத்தின் கீழ் இதுவரை மேற்கொண்ட நடவடிக்கை விபரங்களை தெரிவிக்க வேண்டும். குறிப்பாக, தமிழகத்திற்கு இத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி மற்றும் பிரசாத் திட்டத்தினால் தமிழ் நாட்டில் இதுவரை நடந்துள்ள பணிகளின் முன்னேற்றம் என்ன என்பதை அரசு தெரிவிக்க வேண்டும்.

அதோடு, பிரசாத் திட்டங்களை செயல்படுத்துவதில் அரசுக்கு என்னென்ன சவால்கள்

இருக்கிறது என்பதையும் தெரிவிக்க வேண்டும். தமிழ்நாட்டில் பிரசாத் திட்டத்தின் கீழ் இதுவரை தேர்வு செய்யப்பட்டுள்ள ஆன்மிக சுற்றுலாத் தலங்கள் எத்தனை, அதற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதியின் விபரங்களையும் வெளியிட வேண்டும். மேலும், இத்திட்டத்தின் முன்னேற்றத்தை கண் காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் என்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள் கைவிலங்கிட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம்!

## நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை!

### நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, பிப். 8 -*

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் கைவிலங்கிடப்பட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம் குறித்து விவாதம் நடத்த கோரி, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டதால் இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டது.

அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்களுக்கு கை, கால்களில் விலங்கிட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களை வெற்றிகரமாக திருப்பி அனுப்பி இருப்பதாக அமெரிக்க எல்லை காவல்படைத் தலைவர் மைக்கேல் டபிள்யூ. பேங்ஸ் வீடியோ ஒன்றை சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ளது. இதனிடையே, இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்தக்கோரி காங்கிரஸ் ஒத்தி வைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கியது. நாடாளுமன்ற மக்களவை நேற்று தொடங்கியதும், இது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஆனால் மக்களவை சபாநாயகர் அவையை தொடர்ந்து நடத்தியதால் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். இதனால் மக்களவை 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. இதே போல் மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை ஏற்கப்படாததால், எதிர்க்கட்சியினர் முழக்கமிட்டனர். இதனையடுத்து மாநிலங்களவையும் பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இதனிடையே, நண்பகல் 12 மணிக்கு மக்களவை மீண்டும் கூடியபோது, இந்தியர்களை கைவிலங்கிட்டு அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பிய விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர். ஆனால், சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.

இதனையடுத்து மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர், அவையில் இருந்து வெளியேறிய எதிர்க்கட்சியினர், இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்தக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி, வயநாடு தொகுதி எம்.பி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. இராசாராம்

**பிப்ரவரி 8 (2008)**



**சேலம் மாவட்டத்தில் தொடக்கக் காலத்தில் கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்டவர்.**

**திராவிட இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராகவும் – தந்தை பெரியார் அவர்களின் அணுக்கத் தொண்டர்களில் ஒருவராகவும் விளங்கினார்.**

**இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் 1971ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**1980 முதல் 1984 வரை தமிழக சட்டமன்ற பேரவையின் தலைவராகவும் பணியாற்றினார்.**

**பேரறிஞர் அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக வெளிநாடு சென்றபோது இவரும் உடன் சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**